# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைகலாசாரபீடம்
## முதலாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2015/2016
## (July/August, 2017)

# EC 1112 Fundamentals of Micro Economics

: 02 மணித்தியாலங்கள்

I ல் இரு வினாக்களுக்கும் பகுதி II ல் இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு க்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

(i) "பொருளியல் ஒரு சமூகவிஞ்ஞானமாகும்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) உற்பத்திக் காரணிகளின் வகைகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(iii) இயற்கை வளங்களின் பயன்பாட்டினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

(05 புள்ளிகள்)

(iv) வளங்களின் மாற்று உபயோகம் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(i) "விலைக்கேள்வி நெகிழ்ச்சி என்பதற்கு வரைவிலக்கணம் தருக?

(03 புள்ளிகள்)

(ii) கேள்வியின் வில் நெகிழ்ச்சிக்கும், கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சிக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை? இந் நெகிழ்ச்சிகள் எவ்வாறு அளவிடப்படுமென விளக்குக.

(06 புள்ளிகள்)

பின்வரும் தரவுகள் தரப்பட்டுள்ளன.

| பொருள் | விலையில் சதவீத மாற்றம் | கேள்வித் தொகையில் சதவீத மாற்றம் |
|---|---|---|
| காய்கறிகள் | 30 | 12 |
| பால்மா | 10 | 20 |
| துணி | 10 | 10 |

(அ) ஒவ்வொரு பண்டத்தினதும் கேள்வி விலை நெகிழ்ச்சிக்குணகத்தை கணிப்பிடுக.

(03 புள்ளிகள்)

(ஆ) ஒவ்வொரு பண்டத்தின் விலை 10 சத வீதத்தால் அதிகரிக்கின்றது எனக் கருதுக இந்த அதிகரிப்பு இப்பண்டம் ஒவ்வொன்றினதும் மொத்த கேள்வியை எவ்வாறு பாதிக்கின்றது?

(04 புள்ளிகள்)

(iii) விலைக்கேள்வி நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் பிரதான காரணிகள் யாவை?

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

03. (i) சந்தை சமநிலை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(04 புள்ளிகள்)

(ii) சந்தை சமநிலையோடு தொடர்புடைய பின்வரும் எண்ணக்கருக்களுக்கு வரைபட உதவியுடன் விளக்குக

(அ) மிகைக்கேள்வி

(ஆ) மிகைநிரம்பல்

(05 புள்ளிகள்)

(iii) போட்டி நிலைமையின் கீழ் தொழிற்படும் ஒரு மீன் சந்தையின் மீது பின்வரும் நிகழ்வுகள் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளை பொருத்தமான வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(அ) சுனாமி அலைகளின் தாக்கத்தினால் மீன்பிடிவளங்கள் குறைந்தமை

(ஆ) மீனுக்கு நுகர்வு முன்னுரிமையில் வீழ்ச்சி

(இ) மீனவர்களுக்கு எரிபொருள் மானியக் கொடுப்பனவு

(06 புள்ளிகள்)

(iv) சாதாரண பொருள், இழிவுப் பொருள் மற்றும் கிபன் பொருள் என்பவற்றை வேறுபடுத்துக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

(i) "உற்பத்தி சாத்திய வளையியானது ஒரு நடைமுறை சார்ந்த அமையச் செலவு கோட்பாட்டினை விளக்குவதாகும்". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ii) ஒரு நிறுவனத்தின் குறுங்கால சராசரிச் செலவுகள், நீண்டகால சராசரிச் செலவுகள் ஆகியவற்றை வேறுபடுத்துக. இச்செலவுகளின் நடத்தையினை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளை யாவை?

(10 புள்ளிகள்)

(iii) வெளிப்படையான செலவுகள் (explicit cost) மற்றும் உட்கிடையான செலவுகள் (implicit cost) என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக.

(10 புள்ளிகள்)
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

(i) நிறைபோட்டிச் சந்தையில் ஒரு நிறுவனம் ஏன் "விலையினை ஏற்பவராக" கொள்ளப்படும் நிலை காணப்படுகிறது?

(08 புள்ளிகள்)

(ii) நிறைபோட்டியுடன் ஒப்பிடுமிடத்து அதிலிருந்து தனியுரிமைப் போட்டியினை வேறுபடுத்தும் பிரதான இயல்புகள் யாது?

(10 புள்ளிகள்)

(iii) நிறைபோட்டி சந்தை மாதிரியானது நடைமுறையில் சந்தைகளின் நடத்தையினை விளங்கிக் கொள்வதில் எந்தளவு பொருத்தமுடையது என்பது பற்றி ஆராய்க.

(12 புள்ளிகள்)
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

(i) உற்பத்தியில் குறுங்காலம் மற்றும் நீண்ட காலம் என்பவற்றை வேறுபடுத்துக.

(08 புள்ளிகள்)

(ii) குறைந்து செல்லும் எல்லை விதியினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(iii) அளவுத்திட்ட சிக்கனம் என்றால் என்ன? அவை எவ்வாறு உருவாகின்றது என்பது பற்றி ஆராய்க

(12 புள்ளிகள்)
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

*************